# மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 21–ஆம் நாள் திங்கட்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆடித் திங்கள் 05–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.224/2016 –ல்**

**இடைநிலை மனு எண்.4/2023**

**S. ஏகாம்பரம் ... மனுதாரர்/வாதி.**

**–எதிர்–**

**1.S.கந்தசாமி (இறப்பு)**
**2.K.குப்பம்மாள்**
**3.K.ஜோதிலட்சுமி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்.**

இந்த மனு இன்று (21.07.2025) இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு. K. ராஜா** அவர்களும் 01-ஆம் எதிர்மனுதாரர் இறந்த நிலையில் 02, 03-ஆம் எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு. G. மதிவாணன்** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இந்த நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

## ஆணையுரை

தவறுகைக்காக 28.02.2023-ஆம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்துக்கொள்ள கோரி உரிமையியல் நடைமுறை தொகுப்புச் சட்டத்தின் **09–**ஆம் வகுமுறையின் **09**-ஆம்

விதியின்கீழ் மனு தாக்கல் செய்வதில் விளைந்த **97** நாட்கள் காலதாமத்தை மன்னிக்கக் கோரி காலவரம்புச் சட்டத்தின் **05**-ஆம் பிரிவின்கீழ் மனுதாரர்/ வாதியால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

01. மனுதாரர் முதலேற்பு வழக்கில் வாதி ஆவார். இந்த வழக்கு தொடுக்கப்பட்டப்பின் இறந்துப்போன 01-ஆம் பிரதிவாதிக்கு எதிராக பணம் வசூல் செய்வதற்காக மனுதாரர்/வாதி முதலேற்பு வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். வழக்கு நிலுவையில் இருந்துவந்தபோது 01-ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி இறந்துவிட்டதால் அவருடைய வாரிசுகளாக 02 ஆம், 03 ஆம் எதிர்மனுதாரர்கள் வழக்கின் பதிவனத்திற்கு கொண்டு -வரப்பட்டனர். 02 ஆம், 03 ஆம் பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்புவதற்காக படி கட்டணம் செலுத்துவதற்கு முதலேற்பு வழக்கு 28.02.2023-ஆம் தேதியன்று வழக்கெடுப்பிற்கு இருந்தது. அதற்குமுன்பாக இருந்ததே மனுதாரர்/வாதி வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார். உரிய நேரத்தில் வழக்குரைஞரை சந்தித்து படி கட்டணம் செலுத்துவதற்கு முடியாமல்போனது. மனுதாரர் உடல்நலம் பெற்று வழக்குரைஞரை சந்தித்தபோது படி கட்டணம் செலுத்தத் தவறியதால் வழக்கு 28.02.2023-ஆம் தேதியன்று தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டதாக கூறினார். வழக்கைத் தள்ளுபடிசெய்த ஆணையை நீக்கரவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தனது வழக்குரைஞரை மனுதாரர்/ வாதி கோரினார். அதற்காக உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 09 ஆம் வகுமுறையின் 09 ஆம் விதியின்கீழ் மனு தாக்கல்செய்ய

நடவடிக்கை எடுத்தபோது 97 நாட்கள் காலதாமதம் விளைந்துள்ளது தெரிய வந்தது. 28.02.2023-ஆம் தேதியன்று படி கட்டணம் செலுத்தாதற்கும் அதன் பிறகு 97 நாட்கள் காலதாமதம் விளைந்ததற்கும் காரணம் மனுதாரர் வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்ததேயாகும். மனுதாரர் வேண்டுமென்றோ அலச்சியமாகவோ இருக்கவில்லை. ஆகையால், இந்த மனுவை அனுமதித்து காலதாமத்தை மன்னித்து உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 09 ஆம் வகுமுறையின் 09 ஆம் விதியின்கீழான மனுவை கோப்பிற்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

**எதிருரையின் சுருக்கம்**

**(i) 03–ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 02–ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்.**

02. இந்த வழக்கின் ஒரே பிரதிவாதியான கந்தசாமி இறந்தபின் அவருடைய வாரிசுகள் 02-ஆம், 03-ஆம் பிரதிவாதிகளாக சேர்க்கப் பட்டனர். திருத்தப்பட்ட வழக்குரை 04.09.2021-ஆம் தேதியன்று தாக்கல்செய்யபப்பட்டது. அன்று 02-ஆம், 03-ஆம் பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்ப நீதிமன்றம் ஆணையிட்டது அன்றிலிருந்து 10 ஒத்திவைப்புகளுக்குமேல் வழங்கியும் 02-ஆம், 03-ஆம் பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்ப மனுதாரர்/வாதி நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால்தான் 28.02.2023-ஆம் தேதியன்று நீதிமன்றம் வழக்கை தவறுகைக்காக தள்ளுபடிசெய்தது.

03. மனுதாரர்/வாதி முதலேற்பு வழக்கு எண்.223/2016 என்ற வழக்கை தாக்கல்செய்திருக்கிறார். அந்த வழக்கும் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்

-பட்டுள்ளது. அந்த வழக்கை நடத்தக் கோரி மனுதாரர்/வாதி தாக்கல்செய்த பல்வேறு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. அவற்றை எதிர்த்து மனுதாரர்/வாதி சீராய்வு மனு தாக்கல்செய்து அவை மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்துவருகின்றன.

04. மனுதாரர் வேண்டுமென்றே வழக்கை காலதாமதம் செய்துவருகிறார். வழக்குத் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டப்பின் உடனடியாக மனு தாக்கல்செய்யாமல் வேண்டுமென்றே காலம் கடத்திவிட்டு 97 நாட்கள் காலதாமதமாக உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 09 ஆம் வகுமுறையின் 09 ஆம் விதியின்கீழ் மனு தாக்கல் -செய்துள்ளார். காலதாமதத்திற்கான ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்கள் எதையும் மனுதாரர்/வாதி சொல்லவில்லை. ஆகையால், இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்**

05. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?

**தீர்முடிவு**

06. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. 02-ஆம், 03-ஆம் பிரதிவாதிகளுக்கு படி கட்டணம் செலுத்தத் தவறியதால் 28.02.2023-ஆம் தேதியன்று வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. எதிர்மனுதாரர் சொல்வதுபோன்ற 04.09.2021- ஆம் தேதியன்றுக்கு பிறகு வந்த வழக்கு எடுப்பு நாளிலிருந்தே மனுதாரர்/வாதி படி கட்டணம் செலுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிகிறது. தனக்கு வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டதால்தான் படி கட்டணம்

செலுத்த முடியவில்லை என்றும் அதனால்தான் வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டது என்றும் படி கட்டணம் கட்டமுடியாமல் போனதற்கும் காலதாமதத்திற்கும் தனக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதே காரணம் என்றும் மனுதாரர்/வாதி காரணம் கூறியுள்ளார்.

07. அனைத்து வழக்குகளும் தகுதிப்பாட்டின் அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டும் என்பது நன்கு நிறுவப்பட்ட முன்தீர்ப்பாகும். மனுவில் சொல்லப்பட்டுள்ள காலதாமதத்தின் அளவு வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகள் காலதாமதத்திற்கு மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் ஆகியவற்றை கவனத்தில்வைத்து இந்த மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

08. இருப்பினும் 02-ஆம், 03-ஆம் பிரதிவாதிகள் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்ட நாள் படி கட்டணம் செலுத்துவதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் வழக்குத் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்ட நாள் ஆகியவற்றை கவனத்தில்வைத்து காலதாமத்தால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இன்னலை ஈடுசெய்ய 5,000/- ௨ரூபாயை செலவுத்தொகையாக 01.08.2025-ஆம் தேதியன்றுக்குள் மனுதாரர்/வாதி கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் இந்த மனுவை அனுமதிப்பதே உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**இறுதிமுடிவு**

09. இறுதியாக, மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்கள்/02-ஆம், 03-ஆம் பிரதிவாதிகளுக்கு 5,000/- ௨ரூபாயை 01.08.2025-ஆம் தேதியன்றுக்குள்

செலவுத்தொகையாக கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. தவறினால் இந்த மனு தள்ளுபடி செய்யப்படும்.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 21–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**(ஒப்பம்) வே.புகழேந்தி,**
**மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை

உண்மை/வரைவு ஆணையுரை
இ.ம.எண்.04/2023 in மு.வ.எண்.224/2016
நாள் 21.07.2025